2011 பிப்ரவரி 7]

2. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேரவை விதி 20(1)—இன்கீழ் தீர்மானம் ஒன்றை முன்மொழிவதற்காக அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். அந்தத் தீர்மானத்தை நான் இப்போது படிக்கிறேன்:

"தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20(1)—ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்" என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்துள்ள இந்தத் தீர்மானத்தை முன்மொழியலாம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் தீர்மானத்தினை முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான புரட்சித் தலைவி மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20 உட்பிரிவு (1)—ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித் தலைவி மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10–50

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர். (குறுக்கீடுகள்) மற்றவையெல்லாம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஆறு முதல் நூற்று எழுபது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று எட்டு மற்றும் நூற்று ஒன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.